தலைப்பு 298 – அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 298 – அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை

மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே

விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

(அ) வருமானம் அல்லாத பெறுவனவு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திறைச்சேரி புத்தகங்களின்படி வைப்பு பெறுவனவு ரூபா 110,773 உம் வைப்பு கொடுப்பனவுகளாக ரூபா 111,225 உம் காணப்பட்ட போதிலும், நிதிச் செயலாற்றுக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் வைப்பு பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் தலா ரூபா 91,000 ஆகக் காட்டப்பட்டிருந்தமையினால், வைப்புத் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் முறையே ரூபா 19,773 மற்றும் ரூபா 20,225 ஆகக் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. மேலும், ஏசீஏ 4 படிவத்தில் வைப்பு பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் ரூபா 91,000 உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் வரும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பேன்.	வைப்புக்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும்.

(ஆ) மீண்டெழும் செலவினங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திறைச்சேரி புத்தகங்களின்படி, சம்பளம் மற்றும் வேதனம் செலவினத் தலைப்புடன் தொடர்புடையதாக ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களினால் ஏற்கப்பட்ட ரூ.176,414 பெறுமதியான செலவானது ஏசீஏ 2(ii) படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் வரும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியாக தயாரிப்பேன்.	ஆலோசனை பிரகாரம் சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தொடர்பான உறுப்பினர் கடன்கள் பதிவேட்டிற்கும் முற்பணங்கள் ''பி'' கணக்கின் மீதிக்கும் இடையில் மொத்தமாக ரூ.159,290 வித்தியாசம் காணப்பட்டது.	உறுப்பினர் கடன் பதிவேட்டை சமநிலைப்படுத்துவதில் ஏற்பட்ட தவறு காரணமாக இந்தப் பிழைகள் ஏற்பட்டிருந்த போதிலும், முற்பணங்கள் ''பி'' கணக்கில் அந்த மீதிகள் சரியாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் இலக்கம் 850 இன் மீதியில் ஏற்பட்ட வித்தியாசத்திற்கு அச்சிடும் போது தவறான பிரதி அச்சிடப்பட்டமையே காரணம் ஆகும்.	கணக்கின் மற்றும் பதிவேடுகளில் கடன் மீதி இணக்கம் செய்தல் வேண்டும்.
(ii)	பண்டிகை முற்பணம் பதிவேட்டின்படி, மீளாய்வாண்டினுள் வழங்கப்பட்ட முற்பணம் ரூ. 1,070,000 ஆக இருந்தபோதிலும், அட்வான்ஸ் ''பி'' கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் செலவினப் பேரேட்டின்படி அது ரூ. 1,240,000 ஆக காணப்பட்டது. இதனால் ரூ. 170,000 வேறுபாடு நிலவியது. மேலும், மீளாய்வாண்டில் பண்டிகை முற்பணம் வழங்கப்படாத ஒரு உத்தியோகத்தருக்கு, உறுப்பினர் கடன்கள் பதிவேட்டில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூ. 10,000 கடன் மீதியாக பதியப்பட்டிருந்தது. அதேபோல்,	17 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட பண்டிகை முற்பணங்கள், பண்டிகை முற்பணங்கள் பதிவேட்டில் பதிவுசெய்யத் தவறிவிட்டதை ஒப்புக்கொள்கிறேன். இதுபோன்ற தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் பார்த்துக்கொள்வேன்.	கணக்கிலும், பதிவேடுகளிலும் மற்றும் செலவினப் பேரேட்டிலும் உள்ள நிலுவைகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும்

இரண்டு உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்தமான ரூ. 20,000 ரூபா பண்டிகை முற்பணங்கள் உறுப்பினர் கடன்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வைப்புக்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் நிதி அறிக்கைகளில் சொத்துக்கள் கீழ் காண்பிக்கப்பட்ட மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூ. 47,786,165 பெறுமதியான திறைசேரி வைப்புக்கள், திணைக்களத்தின் நிதி கூற்றுக்களில் பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டதன் மூலம் திணைக்களத்தின் பொறுப்புக்கள் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.	இந்தத் திறைசேரி வைப்புக்களின் பெறுமதியை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் நிதி கூற்றுக்களில் சொத்துக்கள் கீழ் காண்பிப்பது சரியானது. திணைக்களக் கணக்கிலிருந்து இந்தப் பொறுப்பை நீக்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.	பிறழ் பதிவுகள் நிதி கூற்றுக்களில் சீராக்கப்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(உ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
ரூ.1,443,652,021 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் திணைக்களத்தின் சொத்துக்களாகவும், அத்துடன் அளவியல் அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் சொத்துக்களாகவும் நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. திணைக்களத்தின் சொத்துக்களை அடையாளம் கண்டு கணக்கில் பதியவும், அளவியல் அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் சொத்துக்களை கணக்கிலிருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களக் கணக்கில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மீதி ரூ.1,443,652,021 என்பதை ஏற்றுக்கொண்ட போதிலும், நிதியக் கணக்கின் மீதி ரூ.1,478,954,968 ஆகும். அவ்வாறே, நிதியக் கணக்கு திரள் அடிப்படையிலான கணக்கியலைக் மேற்கொள்வதால் தேய்மான ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூ.641,114,795 ஆக உள்ளதால், நிகர மதிப்பு ரூ.837,840,173 ஆகும்.	திணைக்களத்தின் மற்றும் நிதியத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மதிப்பு துல்லியமாக அடையாளம் காணப்பட்டு நிதிநிலை கூற்றுக்களில் துல்லியமாக காண்பிக்கப்படல் வேண்டும்.

(ஊ) முற்பணக் கணக்கு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திறைச்சேரி புத்தகங்களின்படி முற்பணக் கொடுப்பனவின் பெறுமதி ரூ.9,977,119 ஆக இருந்தபோதிலும், நிதிச் செயலாற்றுக் கூற்றிலும் காசுப்பாய்ச்சல் கூற்றிலும் அந்த மீதியானது ரூ.9,889,816 ஆகக் காட்டப்பட்டிருந்தமையினால், ரூ.87,303 வித்தியாசம் காணப்பட்டது.	திறைச்சேரி புத்தகங்களின் அச்சிடப்பட்ட அட்டவணை SA 52 இன் படி வித்தியாசம் இருப்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது எங்களால் பரீட்சிப்பு நிலுவையின் நிலுவைகள் கருத்தில் கொள்ளப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.	சரியான பெறுமதிகள் இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும்.

(எ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) நிலையான சொத்துக்கள் பதிவேடு		
நிதி பிரமாணம் 502(2) மற்றும் 11 ஆம் பிற்சேர்க்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகப் பேணப்படாமையினால், நிதி கூற்றுக்களின் பிரகாரம் மொத்தமாக ரூ.1,443,652,021 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியின் துல்லியம் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமல் இருந்தது.	நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ள பிரச்சினையான நிலைமையுடன் உடன்படுகிறேன். நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்கப்படுவது குறித்து கவனம் செலுத்துவேன்.	சொத்துக்களை தனித்தனியாக அடையாளம் காணக்கூடிய வகையில் நிலையான சொத்துப் பதிவேட்டை நாளதுவரையாக்கப்பட்டு பேண வேண்டும்.
(ii) விடுமுறைப் பதிவேடு		
தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.7 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.	விடுமுறைப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாத சந்தர்ப்பங்களில் தொடர்புடைய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	விடுமுறை பதிவேடு சரியாக மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணிச் செல்லப்படுதல் வேண்டும்.

(ஏ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூ.47,786,165 ஆக இருந்த திறைசேரி வைப்பு மீதி தொடர்பான விரிவான துணை பதிவேடு மற்றும் காலப் பகுப்பாய்வு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இது தொடர்பில் திணைக்களத்திடம் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் இல்லாததுடன் திறைசேரியின் ஆலோசனையைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்காய்விற்கு தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன,

(ஆ) கடந்த வருடத்திற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய	இதுவரை அவ்வாறு மீளாய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிராததுடன் எதிர்காலத்தில் மேற்கொண்டு கணக்காய்வுக்குப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படும்.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.			
(ii)	கணக்காய்வுப் பணிகளை உரியவாறு அமுலாக்குவதற்கு வினைத்திறனான பொறிமுறையொன்று உள்ளதென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அறிக்கையின் 5.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களுக்கமைய அந்தத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படவில்லை.	இது தொடர்பில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கும், வர்த்தக, வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கும் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ள போதிலும், இதுவரை உரிய பதில் கிடைக்கவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	

3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை			
(i)	II ஆம் அதிகாரத்தின் 13.3 பிரிவு	ஒரு நிரந்தர நியமனம் வழங்கப்படும் வரை தற்காலிகத் தீர்வாகவே பதிற் கடமை நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் ஒரே உத்தியோகத்தர் நிர்வாக உத்தியோகத்தரின் பதவிக்குக் பதிற் கடமையாற்றுவதற்காகத் தொடர்ச்சியாக	நிர்வாக உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக உள்ளமை பொது நிர்வாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது ஆயினும், உத்தியோகத்தர் எவரும் நியமிக்கப்படாமையினால், அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கமைய,	தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பதிற் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு விரைந்து

		நியமிக்கப்பட்டிருந்தார்.	இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 திகதிய நடைமுறை விதிகளின் அத்தியாயம் IX ஐப் பின்பற்றி, தற்போதுள்ள ஊழியர்களிலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடனும் நியமிக்கப்பட்டுள்ளார். கணக்காய்வு ஐயவினாவையின் பிரகாரம் தொடர்ந்தும் பதில் நியமனங்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டது.	நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	XII ஆம் அதிகாரத்தின் 5.1 ஆம் பிரிவு மற்றும் 8.1 ஆம் பிரிவு	ஒரு வருடத்திற்கு அதிகபட்சமாக 21 சாதாரண விடுமுறைகளும் 24 ஓய்வு விடுமுறைகளும் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தபோதிலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 12 உத்தியோகத்தர்கள் அந்த வரம்பை மீறி 1.5 நாட்கள் முதல் 91.5 நாட்கள் வரை விடுமுறை பெற்றுள்ளனர்.	ஊதிய இலக்கங்கள் 77, 802, 808, 809, 890, 893, 902, 903, 920 மற்றும் 923 ஆகிய உத்தியோகத்தர்களின் கடந்த கால விடுமுறைகளிலிருந்து இந்த வருடத்தில் மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறைகள் ஈடுசெய்யப்படும் என்பதை அறியத் தருகிறேன். ஊதிய இலக்கங்கள் 955 மற்றும் 52 ஆகிய உத்தியோகத்தர்களின் மோசமான சுகாதார நிலைமை காரணமாகவே இவ்வாறு மேலதிக விடுமுறைகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அந்த உத்தியோகத்தர்களின் மருத்துவப் பரிந்துரைகள் கிடைத்தவுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறியத் தருகிறேன். ஊதிய இலக்கம் 230	ஒரு வருடத்திற்கு அனுமதிக்கப்பட்ட விடுமுறை அளவை மீறிப் பெறும் விடுமுறைகள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

			உடைய உத்தியோகத்தரின் 2025 ஏப்ரல் மாத ஊதியத்திலிருந்து உரிய சம்பளமற்ற நாட்களுக்கான சம்பளம் கழிக்கப்பட்டுள்ளதாக வும் அறியத் தருகிறேன்.	
(iii)	XXIV அதிகாரத்தின் 4:2:2, 4:2:4, 4:2:5, 4:3, 4:4, 4:5, 4:6 மற்றும் 6:3 பிரிவுகள்	ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களிடமி ருந்தும் மற்றும் இறந்த ஒரு உத்தியோகத்தரிடமிருந் தும் அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடனாகிய ரூ.744,966 அறவிடப்படப்பட்டிருக்க வில்லை.	ஓய்வுபெற்ற 05 உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்கள் குறித்து கோரப்படாத சான்றிதழ் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இறந்த உத்தியோகத்தரின் உரிய கடன் அவரது மரண பணிக் கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளதாக 2025.01.23 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது.	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு கடன் அறவிடப்படல் வேண்டும்.
(iv)	XXIV அதிகாரத்தின் 13.6 ஆம் பிரிவு	பண்டிகை முற்பணத் தொகையினை 12 மாத காலப்பகுதிக்குள் ஒரு தடவை மாத்திரமே வழங்க முடியுமாக இருந்தபோதிலும், இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 12 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதிக்குள் மீண்டும் பண்டிகை முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.	இனிமேலும் இவ்வாறான தவறுகள் நிகழாமல் பார்த்துக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கினேன்.	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பண்டிகை முற்பணம் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.
(ஆ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை ஊடாக திருத்தப்பட்ட 756(6) ஆம் நிதி பிரமாணம்	திணைக்களத்தின் 28 பிரிவுகளுக்கான மீளாய்வாண்டிற்குரிய பொருட்கள் சுற்றாய்வு அறிக்கைகள், கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையிலும் பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	கள உத்தியோகத்தர்களின் வேலைப்பளு காரணமாக அறிக்கைகளை பிரதான அலுவலகத்திற்கு விரைவாகப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.	நிதி பிரமாணம் பிரகாரம், குறித்த திகதியில் பொருட்கள் சுற்றாய்வு மேற்கொண்டு அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(இ)	1992 சனவரி 25 திகதிய 03/92 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	காலை 8.30 க்கும் 9.00 மணிக்கும் இடையில் வருகை தரும் உத்தியோத்தரொருவர், பி.ப 4.15 மணிக்குப் பிறகு வேலை செய்து தாமதமான நேரத்தை ஈடுசெய்ய அனுமதிக்கப்படுவார். காலை 9.00 மணிக்குப் பிறகு வருகை தரும் உத்தியோகத்தர்கள், சந்தர்ப்பத்திற்கேற்ப, குறுகிய விடுமுறையாகவோ அல்லது அரை நாள் விடுமுறையாகவோ கருதப்பட வேண்டும். ஆயினும், காலை 9.00 மணிக்குப் பிறகு வருகை தரும் உத்தியோகத்தர்களுக்கு தாமதங்களை மேவுகை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.	பிரதான வீதியிலிருந்து விலகி ஒரு வீதியில் திணைக்களம் அமைந்துள்ளதால் போக்குவரத்து சிரமங்கள் காணப்படுகின்றன. மாற்று வழிகளும் இல்லை. எனவே, மு.ப 9.05 வரை மாத்திரம் தாமதமாக வர அனுமதிக்கப்பட்டுள்ள துடன், அந்தக் காலப்பகுதி மேவுகை செய்யப்பட வேண்டும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமையச் நடவடிக்கை எடுக்க வேண்டும். சுற்றறிக்கைகளுக்கு முரணாகச் செயற்படுவதாயின், அதற்காக பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(ஈ)	2001 ஆகஸ்ட் 22 திகதிய 18/2001 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவை செய்துள்ள ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் வேறு சேவை நிலையங்களில் சேவை செய்வதற்காக இடமாற் றங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால், திணைக்களத்திற்குள் 06 வருடங்கள் முதல் 20 வருடங்களுக்கும் மேலான வருடங்களை நிறைவு செய்த அகில இலங்கை சேவை 29 உத்தியோகத்ர்களுக்கு இடமாற்றங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அகில இலங்கை சேவை உத்தியோகத்தர்கள் எவரும் 5 வருடங்களுக்கு மேலாக சேவை செய்யவில்லை.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த இடமாற்றங்கள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(உ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையினா ல் திருத்தப்பட்ட	திணைக்களத்தில் சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 03 உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்கள்	இது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.	வழிக்காட்டியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கடன் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

நிதி பிரமாணம் 113(6)(ஆ) இன் கீழ் முற்பணம் "பி" கணக்கின் மூலம் வழங்கப்பட்ட கடன் அல்லது முற்பணப் பணத்தை அறவிடும்போது செயற்பட வேண்டிய முறைமை பற்றிய வழிகாட்டல் இல. 01 இன் (உ) பந்தி	தொடர்பில் மொத்தமாக ரூபா 429,176 ஆன கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்தக் கடன் மீதிகளுக்குள் 14 வருடங்களுக்கும் மேலான காலத்திலிருந்து நிலவி வந்த ரூபா 119,906 ஆன கடன் மீதியும் காணப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதி பிரமாணம் 880 மற்றும் 612 ஆம் அதிகாரமான அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணைப்படுத்தும் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் பிணை வைக்கத் தேவையான உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் போது கலந்துரையாடிய போது, வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலாவது, பிணைப் பதிவேடு இல்லாவிட்டாலும், உத்தியோகத்தர்கள் தினசரி பணத்தைச் சேகரிப்பதால், பிணைப் பாதுகாப்பினை அல்லது காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானது என்பதாகும். அதற்கமைய, வருமானம் சேகரிக்கும் கள உத்தியோகத்தர்களுக்காக வழிப்பணக் காப்புறுதிப் பாதுகாப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது.	பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோத்தர்களை இனங்கண்டு நிதி பிரமாணம் பிரகாரம் பிணை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	உரிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தரின் கவனயீனம் காரணமாக, 04 உத்தியோகத்தர்கள் 8 சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்திருந்த மொத்தமாக ரூபா 661,538 ஆன அக்ரஹார காப்புறுதி உரிமைகோரல் விண்ணப்பங்களுக்கான காப்புறுதி நன்மைகள் இழக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணையொன்றை நடத்துவதற்காக 2024 நவம்பர் 06 ஆம் திகதி மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் தினமான 2025 ஏப்ரல் 23 ஆம் திகதி வரையில் அந்த விசாரணை நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்கவில்லை.	இது தொடர்பில் விசாரணைக் குழு பல தடவைகள் பரிந்துரைகளை வழங்கியுள்ளதுடன், மேலும் அது சம்பந்தமாக குழு செயற்பட்டு வருகின்றது. அதற்கமைய, இதற்கான தேவையான நியாயமான தீர்வொன்றுக்கு வர முயற்சிக்கப்படுகின்றது.	ஆரம்பகட்ட விசாரணை நடவடிக்கைகள் துரிதமாக நிறைவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாகவும் அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் தொடர்பாகவும் பரிந்துரைகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள அளவீட்டு சேவைகள் மற்றும் தந்திரோபாயப் பரிசோதகரினால் (தரம் III) கடமைகளை நிறைவேற்றும்போது மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக 2024 சனவரி 19 ஆம் திகதி நபர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த விசாரணை நிறைவு செய்யப்படாமை காரணமாக ஒரு வருடத்தின் பின்னர் அதாவது, 2025 சனவரி 10 ஆம் திகதி மீண்டும் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.	இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	விசாரணை நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட வேண்டும். ஆயினும், 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	2021 செப்தெம்பர் 06 இற்குப் பின்னர் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பதவி வெற்றிடமாக உள்ளது. இது தொடர்பில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கும், வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை உள்ளகக் கணக்காய்வாளரை நியமிப்பது தொடர்பில் உரிய பதில் கிடைக்கப்பெறவில்லை.	உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் விரைவாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிரேஷ்ட மட்டத்திலான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 20 ஆக இருந்தபோதிலும், 2011 ஆம் ஆண்டிலிருந்து அவற்றில் 11 பதவிகள் வெற்றிடமாக நிலவியிருந்ததுடன், அது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 55 சதவீத வீதமாகும். மேலும், இதனுள் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்), உள்ளகக் கணக்காய்வாளர், சட்ட உத்தியோகத்தர் ஆகிய சிரேஷ்ட மட்டத்திலான 03 பதவிகள் வெற்றிடமாக நிலவுவதால், திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் மீது அது நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது.	பொது நிர்வாக அமைச்சின் தாமதத்தின் காரணமாக இந்தப் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. திணைக்களம் தேவையான நடவடிக்கைகளை அதிகபட்சமாக மேற்கொண்டுள்ளது.	வெற்றிடமான பதவிகள் நிரப்புவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலை மட்டத்திலான 30 பதவிகளில் 28 பதவிகள் அதாவது 93 சதவீதமானவை வெற்றிடமாக நிலவியிருந்தன.	உதவி அத்தியட்சகர் பதவிகள் 29 தொடர்பில் 2015 ஆம் ஆண்டிலிருந்து பிரச்சினையொன்று நிலவுகின்றது. இந்தப் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தேவையான அதிகபட்ச மட்டத்தில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, தற்போதைய பதவியணி மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட பிரதமரின் குழுவினால் உதவி அத்தியட்சகர் பதவிகள் 13 இனை நிரப்புவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.	வெற்றிடங்கள் பதவிகள் விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.